Book on Art Treasure of Tamil Nadu.

*94 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Tamil Nadu Tourism Development Corporation to bring out a book on the art treasure of Tamil Nadu, for the information of Tourists from abroad; and

(b) if so, when it is expected to be released?

தமிழ் நாடு அருங்கலைப் பொருட்கள்பற்றி புத்தகம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தகவலுக்காக தமிழ் நாட்டில் உள்ள அருங்கலைப் பொருட்கள்பற்றி ஒரு புத்தகம் வெளியிடும் செயற்குறிப்பு ஏதுவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது ?

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) புதிய நூல் கொண்டுவரும் செயற்குறிப்பு இல்லை; ஆனால் சிறுசிறு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. எஸ். கணபதி: மேலவைத் துணைத் தலைவரவர்களே, பல மேலை நாடுகளில் சுற்றுப்பயணம் செய்பவர்களுக்கு பலவிதமான கைப்புத்தகங்களை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புத்தகங்களைப் பார்க்கும் போதே, அந்த நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற அவா ஏற்படுகிறது. அந்த அடிப்படையிலே, இங்கு வருபவர்களுக்கு, வாராதவர்களுக்கு வர வேண்டுமென்று ஆர்வமூட்டும் வகையில் கைப்புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்க அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட கைப்புத்தகங்களை சிறிய அளவிலே அச்சிட்டு, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக சுற்றுலாத் துறையினர் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

1975 நவம்பர் 10]

அந்த வகையிலே, அகில இந்திய அளவிலே நாம் முதல் பரிசைப் பெற்றிருக்கிறோம். ஆனால் சிறுசிறு புத்தகங்களாக நாம் அச்சிட்டு வழங்குகிறோம். கொடைக்கானல், மகாபலிபுரம் போன்ற முக்கியமான இடங்களைப்பற்றித் தனித்தனியாக நாம் அச்சிட்டு வழங்குகிறோம். நேற்று வந்த காமன்வெல்த் பார்லிமென்டரி டெலிகேஷன் உறுப்பினர்களுக்குக்கூட 25 ரூபாய் பெறுமானமுள்ள புத்தகத்தை வழங்கியிருக்கிறோம். அது, தமிழகக் கோவில்களிலுள்ள சிற்பக் கலையின் சிறப்பைப்பற்றிச் சொல்லுகின்ற முழுப் புத்தகம். சிற்பங்களின் நிழற் படங்களையெல்லாம் தொகுத்துக் கொடுத்திருக்கிறோம். இப்படி சிறிய சிறிய புத்தகங்களாக இருக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே புத்தகமாகக் கொண்டு வரவில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: சுற்றுலாத் துறையினரால் சிறுசிறு புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றனவென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும், எங்கெங்கு தங்க வேண்டும், எங்கெங்கு ஹோட்டல்கள் இருக்கின்றன, அந்தந்த ஊர்களிலுள்ள சிறப்புக்கள் என்ன என்பது பற்றிய முழு விவரங்களைக் கொண்டுள்ள புத்தகத்தை, தமிழகத்தைப் பொறுத்தவரையில் வெளியிடப்போவதாக அமைச்சரவர்கள் சொல்லியிருந்தார்கள். அதுபற்றிய நிலையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சுற்றுப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில், தமிழகத்தைப்பற்றிய முழு விவரங்கள் அடங்கிய "Tamil Nadu with Smile" என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறோம். அதில் முக்கியமான இடங்களைப்பற்றிய தேவையான குறிப்புகள் இருக்கின்றன. அந்தந்த ஊர்களுக்குப் போகும்போது—சென்னைக்கு வந்தால் சென்னையைப் பற்றிய புத்தகமும், வேறு ஊர்களுக்குப் போகும்போது அந்த ஊர்களைப் பற்றிய புத்தகங்களும் தனித்தனியாகக் கொடுக்கப்படுகின்றன. சிற்பக் கலையைப்பற்றிக்கூட தனிப் புத்தகம் வெளியிட்டிருக்கிறோம். கைவினைப் பொருட்களைப்பற்றிய தனிப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறோம். சுவாமிமலை வெண்கலப் பாத்திரம், திருநெல்வேலி கடைசல் பாத்திரம் போன்ற பொருள்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட விவரங்களடங்கிய சிறு சிறு புத்தகங்கள் வைத்திருக்கிறோம். எல்லாவற்றையும் சேர்த்து, ஒரு புத்தகமாகக் கொண்டுவர வேண்டுமென்றால், 250 ரூபாய் அளவுக்கு ஒரு புத்தகத்திற்குச் செலவாகும்.

THIRU G. VASANTHA PAI: Sir, when books like this and a lot of literature are circulated, will the Government at least see that the buses which take these tourists do not break down?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கூடுமான வரையில் இப்போது டூரிஸ்ட் பஸ்கள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வருகின்றன. நேற்று நின்றுவிட்டது. தனியார்கள் ஓட்டுகின்ற கார்கள்கூட மவுன்ட் ரோடில் நிற்கத்தான் செய்கின்றன. மற்ற பஸ்களோடு ஒப்பிடும்போது, இந்த பஸ்கள் பழுது அடையாமல்தான் இருக்கின்றன. இவை வாரத்திற்கு ஒரு நாள் ஓடுகின்றன. ஓரிரு இடங்களில் பழுது ஏற்படுகிறது. விமானத்திற்குக்கூட பழுது ஏற்படுகிறது. டூரிஸ்ட் பஸ்களைப் பொறுத்தவரையில், அவற்றை நவீன முறையில், நல்ல வசதிகளுடன் வைத்திருக்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, both the buses of the Tamil Nadu Tourism Development Corporation broke down yesterday when the Commonwealth Parliamentary Delegation came and were taken to the Integral Coach Factory.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஆகையால்தான் அவர்கள் காலதாமதமாக சட்ட மன்றத்திற்கு வரும் நிலை ஏற்பட்டது. இவர்கள் வரும் நேரத்தில் நிற்கக்கூடாதென்பது அந்த பஸ்களுக்குத் தெரியவில்லை. இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டது.

திரு. சி. வி. ராஜகோபால் : என்னைப்போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பஸ் பாஸ், டூரிஸ்ட் பஸ்களைப் பொறுத்த வரையில் செல்லாதென்று சொல்லி, அவற்றில் ஏற்றாமல் சென்றுவிடுகிறார்கள். எனவே அந்த நிலையை நீக்க ஆவன செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்ட மன்ற உறுப்பினர் சுற்றுப்பயணியாக மாறுகின்றபோது, அதற்கான தகுதி, திறமையோடு இருக்க வேண்டும். அந்த வகையிலே பணம் செலுத்தத்தான் வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர் என்று போகும்போது, அவர்கள் பேருந்துகளில் செல்லலாம்.

Government Boys' High School, Koothanallur.

* 95 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(a) whether any representation has been received by the Government during 1975, from the public including parents, on wide-spread indiscipline in the Government Boys' High School, Koothanallur, Thanjavur district; and